# The Morning Star

உதய தாரகை

Registered as a Newspaper (Established 1841) Published Every Friday

Vol. 128. JAFFNA, FRIDAY, 12TH JULY, 1968. No. 26.

RIGHTEOUSNESS EXALTETH A NATION BUT SIN IS A REPROACH TO ANY PEOPLE



**Rates**

*Subscriptions :*

Inland Rs. 15-00 per year

Foreign Rs. 20-00 " "

Single copy 40 cts. (including postage)

*Advertisement :*

On application

*In Memoriam :*

Rs. 12-50 per insertion (within 4 inches)

*Order Nisi :*

Rs. 15-00 for two insertions (within 6 inches)



**Notice**

*Please Address :*

(1) All Editorial matter (excluding news) for the English pages) to : The Editor. The *Morning Star*, Vaddukoddai.

(2) All news to the News Editor Vaddukoddai.

(3) All Editorial matter for the Tamil pages to : The Tamil Editor, The *Morning Star*, Parsonage, Alaveddy

(4) All Business correspondence re Advertisements and Subscriptions and all remittances to :

The Manager, The *Morning Star* — A. Kadirgamar, Esq. College Lane, Vaddukoddai.


## TO ALL SUBSCRIBERS

This is to remind you again to pay up all arrears of subscriptions due till the end of 1967. The 1968 subscription of Rs. 15/- is now due. Please respond as early as possible.

**Manager**

25 — 28

## NAVALY Y. M. C. A.

A series of Bible Meetings under the auspices of the Navaly Y. M. C. A. were held in the Navaly Church premises from the 1st to the 5th of July, commencing each day at 6-30 p. m.

Brothers J. C. Choate and John Wheeler of the Church of Christ, Colombo, conducted the meetings with the help of Film Slides.

The following were the subjects of the meetings :

The Patriarchal Age, the Mosaical Age, the Christian Age, God's Plan for Redeeming Man and Church History.

The meetings were more or less like a Bible Study and they helped those who were present to know more of the Bible and its history and teachings.

The gathering included Hindus and Roman Catholics as well.

## NEW COMMISSIONER OF ASSIZE

Mr. Vincent T. Thamotheram, B. A., LL. B., Solicitor General, has been appointed Commissioner of Assize. He is just now presiding over the Assize sessions at Negombo, which commenced last Wednesday. Mr. Thamotheram was admitted to the Bar in March, 1942 and joined the Attorney General's Department as an additional Crown Counsel in October, 1944. So, for the last 24 years he has been in that Department. He was recently confirmed as Solicitor General.

Mr. Thamotheram is a son of the late Mudaliyar Thamotheram and a grand-son of the late Rev. D. P. Niles of Jaffna. He is one of the leaders of the Methodist Church and was for a period the Vice-Chairman of the Ceylon Methodist Conference.

## GOING ABROAD

The Rev. and Mrs. A. C. Thambirajah, of Navajeevanam, Paranthan have left Ceylon on a tour, which includes residence and study in several Christian churches, institutions and organizations related to agriculture, poultry, dairy and social services. They have the following countries on their list to visit : India, Indonesia, Thailand, Hong Kong, Philippines, Taiwan, Malaysia, Singapore, Australia and New Zealand.

They are going on an Agricultural Project, sponsored by the East Asia Christian Conference. They are expected to be away for over nine months.

## AT THE HEAD OF THE DEPARTMENT OF PUBLIC WORKS

The Public Service Commission has appointed Mr. L. C. Williams as Director of the Department of Public Works and Mr. W. N. G. Watson as its Assistant Director. Mr. Williams counts 31 years of service in the Department, which he joined in May, 1937 as a temporary Junior Assistant Engineer. In November 1955 he was appointed Assistant Director of Public Works, and in February 1957 as Acting Deputy Director. He is the eldest son of the late Rao Bahadur Dr. R. H. Williams, who was the Personal Assistant to Surgeon General, Madras, and the late Mrs. Anantnam Williams.

Mr. Watson joined the Department as a temporary Junior Assistant Engineer in May 1942. For several years he was attached to the Head Office as a Superintending Engineer and last December he was appointed Assistant Director. Now he has been confirmed in this appointment. He is a son of the late Mr. W. R. Watson, Assistant Director of Education, Ceylon, and the late Mrs. Thangam Watson.

## METHODIST DAY CELEBRATIONS AT ST. PETER'S CHURCH, JAFFNA.

The annual Thanksgiving Service at St. Peter's Church, Jaffna, was held on June 23, when Methodists throughout Ceylon commemorate the arrival of the first Missionaries in this Island in 1814.

The Rev. Dr. D T. Niles led the large congregation in worship and preached the sermon in Tamil.

He said that, while the law of gravitation held the physical world together, there was another law, the law of mutuality that governed the spiritual world. If a man was of help to his fellowman, he received help in return. If he did evil to him, evil befell him. One could go further and say that the test of whether a man had really helped another man who came to him in distress was whether he himself had been helped by his meeting the other man. This law of mutuality was as wide-ranging and as inexorable as the law of gravity.

In the evening the whole congregation was divided into four groups and, while the men, women and young people met in separate groups for panel discussion on different topics, Mrs. S. K. Kirupairajah and Miss Sethukavalar kept the children entertained with games.

In the men's group Mr. G. N. Edward, Vice-Principal of Palaly Training College, led a stimulating discussion on the relevance of certain features of Methodism to the present day. "Local Preaching", as lay preaching is called by Methodists, was the first topic taken up. It was pointed out that all the churches were now become alive to the need for lay people to do much of the work that had hitherto been done by ordained clergymen. This was partly because of theological developments but also because of the poverty of candidates for the ministry. In this situation Methodists could be glad that they had pioneered the practice of using laymen as preachers. However, in the early days of Methodism laymen not only preached at church services but had also undertaken the pastoral care of Church members. The group felt that this side of their work should be revived and developed.

The old Methodist 'Class-Meeting,' was considered next. It had promoted Christian fellowship and nurtured Christian spirituality. A few of the elder members present recalled nostalgic memories of it. The opinon was expressed that it was wrong to think that the Class-Meeting was a thing of the past, and impossible to revive today. There was general agreement that Methodist Worship in Ceylon, in common with the worship of other branches of the Church, should take a further step towards Easternisation. There was a time when this subject was eagerly taken up by the Churches but after a few changes in this direction had been made the impetus towards making Christian worship more Eastern had spent itself. The group felt that one relic of Western influence that should go was the pews in our Churches. They should be replaced by mats as in Ashram Chapels.

The panel discussion for the women was chaired by Sister Malar Chinniah. The topic for discussion was "Family Relationships". Dr. Mrs. Chandra Sethurajan spoke on the Husband-Wife relationship; Miss Ruby Appadurai on the Parent Child relationship; Mrs. Thavam Arudpiragasam on the Parent-Teenager relationships and Mrs. Chellam Thiyagarajah on the Mistress-servant relationship in homes. A very interesting discussion on the various aspects of these relationships then followed.

The discussion for the young people centred round the question as to how far it was possible for Christians of the present age to be firm in their Christian faith. Mr. M. Navaratnarajah, Rev. Paul Benjamin and Master Govindaraj spoke on present day education and faith, the Christian Community and faith, the Present day Government and faith respectively. It was the view of those who participated in the discussion that, though present education in Science, and race-relationships and problems of administration brought many temptations and caused many pitfalls, the true believer would not be shaken by these issues.

Next followed an hour of singing led by Sevak Sam Alfred and Mr. M. Navaratnarajah. Young and old, men and women heartily entered into the spirit of the evening and enjoyed this hour of community singing.

Then followed a fellowship meal of string-hoppers and curries. Folks sat round in groups and families, eating these packets of food.

It was a memorable day for nearly all that participated in it and it was particularly heartening that members from Vannarponnai, Puttur and Achelu also were able to join in all the activities and make it a day of thanksgiving and joy.

## WORLD ASSOCIATION FOR CHRISTIAN COMMUNICATION

Some 225 television and radio specialists from 39 countries on five continents wound up a week of technical and theological discussions in Oslo, Norway, by establishing a new, all-inclusive international organisation of Protestant professionals which they called the World Association for Christian Communication.

This was done by amalgamating the five-year-old World Association for Christian Broadcasting, based in London, with the International Co-ordinating Committee for Christian Broadcasting, based in New York.

Signs were not wanting that the exclusively electronic character of the Association will soon be broadened to include writing and publishing activities; nor is it likely that the Protestant character will be preserved for long in its present form judging by the many Roman Catholic observers who attended. One of these was Father Agnellus Andrew of London, newly-elected President of U. N. D. A.—world-wide Roman Catholic agency. In impromptu remarks from the floor Father Agnellus announced plans to widen participation in the eleven-year-old Catholic television festival next February at Monte Carlo to include Protestant producers from nearly 80 countries and almost all Christian bodies. The Franciscan priest said that he was there not only to bring fraternal greeting, but to initiate closer co-operation between U. N. D. A. and its Protestant opposite number.

The Rev. Frederick R. Wilson of New York City, Secretary for research and planning of the United Presbyterian Church in the U. S. A., was elected the first President.

The Rev. W. D. Kennedy-Bell, in charge of overseas religious broadcasting for the B. B. C. in London, was elected Secretary.

The world organization, its constitution stipulates, will be directed by its corporate members, the churches and big broadcasting organisations, and by individual members, professionals in the fields of broadcasting and television, who specialize in religious programming. Eventually the world of writing and publishing will be included in the membership.

An array of international speakers stressed the problems and dangers of using secular forms of communication to convey the Christian challenge. Almost all deplored widespread lack of professionalism among Christian broadcasters, urged more intensive training and the setting of higher standards of quality.

Norwegian Bishop Fridtjov Birkeli, soon to be primate of all Norway, in his opening address as presiding officer of the Assembly, said broadcasting gave the Church its greatest, and possibly its last chance to put the Christian message to the world as the answer to life's problems. The air waves, he stated, provided the greatest pulpit of all time in a world that was beset by a terrible lack of communication between neighbours, nations, ideologies and political blocks.

The distinguished head of West German Broadcasting in Cologne, Dr. Klaus von Bismarck, spoke against "playing down "uncomfortable ideas" in religious programming, reminded Church broadcasters that they are part of an increasingly secular society.

The Rev. Dr. Eugene Carson Blake, General Secretary of the World Council of Churches, urged them to help "the Church to get out of its self-made ghetto into the world to find itself."

The basis of Christian broadcasting was questioned by an American research psychologist whose career included two decades of service as an executive of the Columbia Broadcasting System. Christian radio and television men should realize, Dr. Gerhard Wiebe of Boston University said, the limitations of their craft. They should not expect "the media to replace the missionary", Not only should they be more modest in what they hope to accomplish, but they should even consider that "may be it isn't in the cards" for them to do more than maintain the faith in those who already have it. A rethinking of the churches' communications strategy is a "must", Dr. Wiebe declared.

## OBITUARY

*Mrs. R. D. A. Gnanadurai*

The death occurred on the evening of last Saturday, the 6th inst., at her residence at Uduvil of Rose Darlie Arulmalar Gnanadurai, the wife of the late Mr. Alfred Victor Gnanadurai. Though she had been ill for sometime, death came to her suddenly. She was 68 years of age at the time of her death. A daughter of the late Mr. and Mrs. E. N. Welch of Uduvil, she had her education at the Uduvil Girls' College. On her finishing her education, she became a teacher of Art at her old school. For several years she was on its staff and gained great popularity and respect for her efficiency in her work and proficiency in Art. She struck all those who came into contact with her as a lady of quiet strength, great principles and of method and order in all that she did. A woman of deep faith, she proved to be a devoted mother to her children who had lost their father early in their lives.

The funeral took place on the morning of Monday, the 8th inst., the service at home being conducted by the Rev. K. S. Jeyasingam, assisted by the Revds. J. J. Ratnarajah and (Sevak) Sam, Alfred. The sermon was preached by the Rev. Mr. Jeyasingam. The children of the deceased rendered her favourite hymn 'Jesus lover of my soul'. The remains were then interred at the Uduvil Church cemetery, where the committal rites were performed by the Rev. K. S. Jeyasingam.

She leaves behind one daughter—Pushpam, of the staff of Manipay Hindu College; three sons—Samuel, Engineer, Overseas Telecommunication Service, Negombo; Victor, doctor at the General Hospital, Jaffna; Richard, of C. I. C. Ltd., Colombo—two sisters, Mrs. A. N. Rasiah of Ratnakara Place, Dehiwela; and Mrs. B. C. Arunasalam of Singapore and a large number of friends and relatives who will miss her. Mr. S. H. T. Welch and the Rev. R. C. P. Welch are two of her brothers who pre-deceased her.

## ORDER NISI

IN THE DISTRICT COURT OF JAFFNA.

*Testamentary Jurisdiction. No. 2229.*

In the matter of the Last Will and Testament of the late Rajaseenan David Lewis of Uduvil.

Deceased,

Mary Gnanam widow of Rajaseenan David Lewis of do.

Petitioner,

Vs.

Minor 1. Lewis Evangeline Thangaratnam.

" 2. Lewis Prema Rohini Edith.

" 3. Lewis Thillairajah Johnathan.

" 4. Lewis Thillainathan Peter.

5. Paul Chandrasenan Lewis of 100/3., Horton Place. Colombo.

Respondents.

This matter coming on for disposal before R. Paramaguru, Esq. Additional District Judge, Jaffna, on the 9th day of April, 1968, in the presence of Mr. K. Senathirajah Proctor on the part of the petitioner and the petition and affidavit of the petitioner and of the witnesses and notary to the Last Will having been read.

It is ordered that the abovenamed 5th respondent be appointed guardian-ad-litem over the minors the abovenamed 1st to 4th respondents and that the Last Will and Testament of the abovenamed deceased dated 24th December, 1967 and attested by K. Senathirajah Notary Public under No. 7078 be declared proved and probate thereof issued to the petitioner by the Executrix named in the said Will, unless the abovenamed 5th respondent or any others interested shall appear before this Court on or before the 26th day of July 1968 and show sufficient cause to the satisfaction of this Court to the contrary.

It is further ordered that the abovenamed minors the 1st to 4th respondents should be produced on the said 26th July, 1968.

This 9th day of April, 1968.

Sgd. I. M. Ismail,
District Judge.

Drawn by
[illegible]
Proctor for Petitioner.

26 & 27

## FROM FAR AND NEAR

### TO FIGHT CORONARIES

A new drug extracted from the venom of a poisonous snake, the Malayan Pit Viper, is beginning to be used to reduce the risks of coronary thrombosis and other dangerous blockages of veins and arteries. Called Arvin, the drug is being extracted and purified by Twyford Research Laboratories in Britain, an off-shoot of the Guinness brewing concern.

The Ceylon Viper, or Polonga, is a close relative of the Malayan Pit Viper.

Doctors who have tested Arvin on more than 20 patients believe that the drug will offer striking advantages over any available today. Arvin has not yet been passed for universal use but there seems little doubt that it represents a real advance in dealing with a condition which is becoming more and more common throughout the world.

When a snake squirts poison into its victim, it injects an anti-coagulant with the poison to make it spread faster. Doctors have been able to turn this property to their own advantage.

A few years ago the National Research Development Corporation in Britain, a Government body which supports promising new research of all kinds, backed work on the snake venom.

Pharmacologists at the University of Malaya and the Liverpool School of Tropical Medicine suggested this compound might prove especially valuable for treating people at risk from thrombosis (blood clots).

Arvin works as an anti-coagulant in an unusual way. Human blood contains special proteins carried around in solution as compounds called fibrinogens, but during clotting fibrinogen is precipitated (made solid), as the fibrous substance called fibrin, which is one element in a blood clot.

Normally this process is the first stage in healing wounds, but it can occur in the wrong place and cause a dangerous blockage.

Arvin, paradoxically, works by turning all the fibrinogen in the blood into fibrin (so it might be expected to cause clotting), but with the difference that none of the other elements involved in clot formation is working at the same time, and therefore, no blockages are formed.

Once all the fibrinogen has been precipitated, no clots can be made, because there is no fibrinogen from which to make them.

One expert has compared the action of Arvin to removing a powder barrel (the fibrinogen) instead of merely treading on the fuse (meaning the action of the normal anti-coagulants, which merely interrupt the clotting process rather than eliminate it).

*British Bulletion*

O

## RELIGIOUS FREEDOM IN THAILAND

"A person enjoys full liberty to profess any religion, religious sect, or religious creed and to exercise the form of worship in accordance with his own belief, as far as it is not contrary to his duties as a citizen or to public order or good morals." So states Chapter III, Article 26 of the proposed new Constitution for Thailand.

It further states that "a person is protected against any act of discrimination by the State which is prejudicial to his rights or detrimental to his due benefit for the reason that the religion, religious sect or religious creed he professes or the form of worship he exercises differs from those of others".

The Constitution is to be promulgated on June 20, It restores some freedoms which have been in abeyance during the past ten years of military rule.

In keeping with the policy of the separation of religion and government, clergy are prohibited from the right to vote. They are also barred from sitting in the Assembly or the Constitutional Tribunal. Christians may hold office, but they often find it extremely difficult to participate fully in the government because of the Buddhist ceremonies and rites which are expected as a matter of course in the official process of government.

— *E. P. S. Geneva*


**FLOWERS**

FOR ALL OCCASIONS

*Phone or write :*

**Lane & Company**

P. O. Box 19

**NUWARA ELIYA.**

*Grams:* "LANES" — *Phone:* 376


*Youth Column*

My dear Youngsters,

In my last letter to you we thought of the victory of Dr. Martin Luther King and Robert Kennedy even in death. In the words of St. Paul in II Corinthians 5 : 15 "His (here St. Paul s refering to Christ) purpose in dying for all was that men while still in life should cease to live for themselves and should live for Him who for their sake died and was raised to life" verse 18 — "From first to last this has been the work of God. He has reconciled us men to himself through Christ and he has enlisted us in the service of reconciliation". Do you too wish to be men of action? Then you must begin preparations now.

If we take our own local environment, do we find around us situations where as individuals we can do our own little bit to be peace-makers and reconcilers? Do you think you can take upon yourself in your own groups the study of the problems of the caste situation and the factors contributing to the racial and communal problem in our country? The most important thing to do is to study. If you go into the history of the caste system and how it originated, you will find that it has a cultural background, later blended into the existing Hindu philosophy which is centuries old. We'll have to learn the differences between culture, philosophy and religion. What is the Christian attitude to this problem? How do I, in my present situation, in my present time, environment and age, face this problem? Can you see the difference between ignorance, reaction and complexes — that make the issue seem larger than it is to some and completely unimportant to others.

How are you as a young Christian of today and a man of tomorrow (who might hold an important post where these have to be dealt with in an official capacity) preparing yourself to be responsible?

"As the soil, however rich it may be, cannot be productive without culture, so the mind without cultivation can never produce good fruits".

Yes, facing these conflicts around us is an essential part of our education and preparation for life.

With best wishes,

Yours sincerely,
PETER RABBIT,

C/o. the Editor,
The "Morning Star",
Vaddukoddai,


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வெள்ளிதோறும் வெளிவருவது

# உதயதாரகை

கிறிஸ்தவ வார இதழ்] Estd. 1841 [UTHAYATHARAKAI

மலர் 128 ] 12—7—1968 [ இதழ் 26

"நீதி ஜனத்தை உயர்த்தும்; பாவம் எந்த ஜனத்துக்கும் இழிவாம்."

## மறுமைப் பிரவேசம்

திருமதி சின்னத்தங்கம் முத்துத்தம்பி

காலஞ்சென்ற ஆசிரியர் திரு. ஆசீர்வாதம் முத்துத் தம்பியின் மனைவியாரும், திருவாளர்கள் பரராசசிங்கம் (R. D. O.) இராசசிங்கம் (Supdt. of Audits) ஜெயசிங்கம் (பிரதம லிகிதர் P. W. D) திருமதி கல்லம்மா யோசேப்பு ஆகியோரின் தாயாருமான திருமதி சின்னத்தங்கம் முத்துத்தம்பி கடந்த வியாழக்கிழமை (4-7-68) தமது 79 ஆம் வயதில் மறுமைக்குள் சென்றனர். மறுநாள் (5-7-68) மாலை 4-30 மணிக்கு சுண்டிக்குழியில் அவரது மகள் (திருமதி யோசேப்பு) வீட்டில் மறைத்திரு. W. R. குமாரசாமி அவர்களால் சேமாராதனை நடத்தப்பட்டு, சுண்டிக்குழி பரி. யோவான் சேமக்காலையில், மறைத் திரு. குமாரசாமி அவர்களால் நல்லடக்கஞ் செய்யப்பட்டார்.

துயருறும் மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள், சுற்றமித்திரருக்குத் தேவதேற்றரவு கிட்டுவதாக.

○

திருமதி ரேஸ் டாளி அருள்மலர் ஞானதுரை

உடுவில் சபையைச் சேர்ந்தவரும், காலஞ்சென்ற திரு. ஏ. வி. ஞானதுரையின் மனைவியாரும், திரு. சாமுவேல் (பொறியியலாளர்) டாக்டர் விக்ரர், திரு. றிச்சி (I. C. I. Ltd. கொழும்பு) செல்வி புஷ்பம் (ஆசிரியை, மானிப்பாய் இந்துக்கல்லூரி) ஆகியோரின் தாயாரும், காலஞ்சென்ற மறைத்திரு. ஆர். சி. பி. உவெல்ச் அவர்களின் சகோதரியுமான திருமதி டாளி ஞானதுரை கடந்த ஞாயிற்றுக்கிழமை (6-7-68) தமது 68 ஆம் வயதில் மறுமைக்குள் பிரவேசித்தனர். மறுநாட்காலை அவரது இல்லத்தில் மறைத்திருவாளர்கள் கே. எஸ். ஜெயசிங்கம், ஜே. ஜே. இரத்தினராசா, சாம் அல்விறெட் ஆகியோரால் நடத்தப்பட்ட சேமாராதனை அத்தியட்சரின் ஆசீர்வாதத்துடன் முடிவுற்றது.

உடுவில் சேமக்காலையில் மறைத்திரு. கே. எஸ். ஜெயசிங்கம் அவர்களால் நல்லடக்கஞ் செய்யப்பட்டார்.

துயருறும் மக்கள், சுற்றமித்திரருக்குத் தேவ தேற்றரவு கிட்டுவதாக.

## நவாலி வாலிபர் கிறிஸ்த சங்கம்

மேற்படி சங்கத்தின் ஆதரவில் படக்காட்சிகளோடு கூடிய வேத அறிவுரைகள் யூலை 1 ஆம் திகதி தொடக்கம் 5 ஆம் திகதி வரை ஆலய மைதானத்தில் நடைபெற்றன. கொழும்பு கிறிஸ்தவ சபையைச் சேர்ந்த சகோதரர்கள் ஜே. சி. சோற், ஜே. வீலர் என்பவர்களால் நடத்தப்பட்டன. கிறிஸ்தவர்கள் அல்லாதவர்களும் இக் கூட்டங்களில் கலந்து கொண்டனர். இறுதி நாளன்று ஆலயம் நிரம்ப மக்கள் கூடியிருந்தனர்.

## கிறிஸ்த வாலிபர் பாசறை

யாழ்ப்பாணக் கல்லூரிகளின் கிறிஸ்த மாணவ இயக்கத்தின் ஆதரவின்கீழ் யூலை மாதம் 7 ஆம் திகதி முதல் 9 ஆம் திகதி வரை ஒரு பாசறை மருதனுமடம் பெண்கள் நிலையத்தில் நடைபெற்றது. இப்பாசறையில் வேதாகமப் படிப்பு, பாசறையின் பொருளாகிய, கடவுள் அழைக்கிறார், என்ற தலைப்பில் வண. போல் பெஞ்ஜமின் அவர்களால் நடத்தப்பட்டது. மேற்படி படிப்பில் கிரகித்துக் கொள்ளும் விஷயங்கள் நாடக மூலம் மாணவர்களால் விளக்கிக் காண்பிக்கப்பட்டன. கடவுளின் அழைப்பு என்றால் போதகராகவோ மிஷனரியாகவோ வருவது மாத்திரம் அல்ல என்றும், நாளாந்த வாழ்க்கையில் அவர் அழைப்புக்குள் கிறிஸ்தவ மாணவர்கள் எப்படி நடந்துகொள்ளலாம் என்பதைப்பற்றியும் திரு. எஸ். என். சுகுணனந்தன் விளக்கிப் பேசினார். சிறுகதைகள் எழுதும்போது கவனிக்க வேண்டியவைகளும் எழுதும் முறையும் திரு. சாவேந்தனால் அழகாகப் போதிக்கப்பட்டன. படங்கள் வரையும் பயிற்சி ஹாட்லிக் கல்லூரி ஆசிரியர் திரு. மார்க் அவர்களாலும் பாட்டுக்கள் எழுதி இசையமைக்கும் பயிற்சி திரு மார்க்கஸ் ஸவரத்தினராஜாவாலும் நடத்தப்பட்டன. முடிவில் சிறந்த படங்கள், சிறந்த சிறுகதைகள், சிறந்த பாட்டு ஆகியன காட்சியில் இடம்பெற்றன. இதைவிட இயேசுவின் பாடுகள் குறித்த ஒரு படக்காட்சி, பாசறைத்தீ, விளையாட்டுக்கள் உட்பட வேறு சில நிகழ்ச்சிகளும் இடம் பெற்றன. முடிவு ஆராதனை வழமையான ஆராதனை ஒழுங்கைப் பின்பற்றுமல் வாலிபரால் ஒழுங்கு செய்த ஒரு புதிய முறையில் நடத்தப்பட்டது. திரு. சி. வி. பவிங் திரு. இரத்தினவேல் திரு. ஜெயசிங் டேவிட், திருமதி ஏச். ஜீ. ஆசீர்வாதம் உட்பட வேறு பலர் இப்பாசறையை ஒழுங்கு செய்திருந்தனர். இப்பாசறையில் ஐம்பதிற்கு மேற்பட்ட வாலிபர்கள் கலந்து கொண்டனர். ஓர் அமெரிக்க வாலிபப் பெண்ணும் இதில் கலந்து கொண்டது குறிப்பிடத்தக்கது. மொத்தத்தில் இது வாலிபர்களுக்கு பிரயோசனமான அனேக விஷயங்களை மகிழ்வுடன் அறிந்து கொள்ளக்கூடிய பாசறையாக அமைந்தது.

## வடபகுதி 'சுப்பிறீம் கோடு'

வடபகுதி சுப்பிறீம் கோட்டு இரண்டாங் கத்தாய விசாரணை ஒகஸ்டு மாதம் 9 ஆம் திகதி தொடக்கம் நீதியரசர் திரு. அலஸ் முன்னிலையில் நடைபெறும்.

## பௌர்ணமி நாள் கலை விழா

யாழ்ப்பாண மாநகர சபையால் கிரமமாக நடத்தப்பட்டு வரும் பௌர்ணமி நாள் கலை விழா கடந்த செவ்வாய்க்கிழமை மாலை 6—30 தொடக்கம் யாழ் திறந்த வெளியரங்கில் சிறப்பாக நடைபெற்றது. யாழ். மத்திய கல்லூரியின் "நீதிமன்ற வீரர் வில்லவராயச் செட்டியார்" என்னும் சமூக நாடகமும், கே. பீ. எம். நாடக மன்றத்தாரின் "பிஞ்சு முகம்" எனும் கலை அபச நாடகமும் இடம்பெற்றன.

## அன்பளிப்பு

பர்மாவில் அண்மையில் ஏற்பட்ட புயலால் பாதிக்கப்பட்டவர்களுக்கு உதவுவதற்கென இலங்கை அரசாங்கம் பர்மா அரசாங்கத்துக்கு 1000 இருத்தல் தேயிலையை அன்பளிப்புச் செய்யும். இந்த அன்பளிப்பு விரைவில் விமானமூலம் அனுப்பி வைக்கப்படும்.

## தனிவர்ணக் கொடி பாடசாலைகட்கு ஆகாது

தனியொரு வர்ணக் கொடியுடைய பாடசாலைகள் உடனடியாக இருவர்ணக் கொடிகளைத் தமதாக்கக் கொள்ளுமாறு வித்தியாதிபதி சகல பாடசாலைகளையும் கேட்டுள்ளார்.

## புதிய தொழில் ஆணையாளர்

இன்றுள்ள தொழில் ஆணையாளர் திரு. லிங்கன் அபயவீர சர்வதேச தொழில் நிறுவனத்தில் கடமை புரியச் செல்ல விருப்பதால் அவரிடத்துக்குப் பதில் ஆணையாளர் திரு. ரீ. ஆர். ஆர். விஜய வக்கிரம நியமிக்கப்படலாமென நம்பப்படுகிறது.

## யாழ். மாநகர பதில் ஆணையாளர் மறுப்புத் தெரிவித்துள்ளார்

யாழ்ப்பாண அரசினர் வைத்தியசாலை வெளிநோயாளர் பிணியாய் நிலையத்திற்குக் காணி கொள்வனவு சம்பந்தமாக யாழ்ப்பாண மாவட்ட உதவி அரசாங்க அதிபர் காணி எடுத்தற் சட்டத்தின் பிரகாரம் அனுப்பிய அறிவித்தலுக்கு யாழ். மாநகர பதில் ஆணையாளர் சுகாதார அமைச்சுக்கு மறுப்புத் தெரிவித்துப் பின்வரும் காரணங்களைக் காட்டியுள்ளார்.

1935 இல் இக் காணியைக் குறித்த தேவைக்கு அரசாங்கம் எடுக்க முற்பட்டபோது அப்போதைய மாநகரசபை மறுத்துவிட்டது.

விசேட ஆணையாளரின் இருவருட ஆட்சியிலும் மறுக்கப்பட்டது. மக்களால் தெரிவு செய்யப்பட்ட பிரதிநிதிகள் மாநகர சபைப் பொறுப்பேற்கும்வரை இதைப்பற்றி முடிவு செய்வது தகாது.

1935 யூலையில் இக் காணியைப் பார்வையிட்ட நகர நிர்மாணத்திட்ட அதிகாரி இக் காணி நவீன சந்தை, பஸ்தரிப்பு நிலையம் இரண்டுக்குமே பொருத்தமான தென அறிக்கை கூறியுள்ளார்.

இது ஒன்றே மாநகரசபைக்குச் சொந்தமான காணி. அங்கே அலுவலகக் கட்டிடங்கள், மின்சாரப் பகுதி வழிபருக்கு வாசஸ்தலங்கள் கட்டப்படவேண்டியிருக்கின்றன. அங்குள்ள ஆயுர்வேத வைத்தியசாலை விஸ்தரிக்கப்படவேண்டும். அதை வேறிடத்திற்கு மாற்றுவது பணச்செலவும் நோயாளருக்குக் கஷ்டமுமாகும். தினமும் 300 நோயாளர் இங்கு வருவதற்கு இதுபஸ்நிலையத்துக்கு அண்மையில் இருப்பது முக்கிய காரணமாகும். மராமத்துப் பகுதி, மின்சாரப் பகுதியினரின் வேலைத்தலங்கள் இங்குள்ளன. மாற்றுவதானால் பெரும் செலவாகும்.

குடிதண்ணீர் விநியோக இரண்டாவது நீர்த்தொட்டி இக் காணியிலேயே கட்டப்பட இருக்கிறது. இக் காணிக்கும் வைத்தியசாலைக்கு மிடையான தெருவை மூடினால் கஷ்டம். வைத்தியசாலைக் காணியை எடுத்தால் பஸ் நிலையம் வேறிடம் செல்ல வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்படும்.

இவற்றைக் கவனியாது காணியைக் கொள்வனவு செய்வதாக இருந்தால் மாநகரசபை காணி, கட்டிடங்கள் ஆகியவற்றுக்காக ரூபா 384194 - நஷ்டஈடு கோரும்.

## பிரபுக்கள் சபை அதிகாரம் குறையும்

பிரிட்டிஷ் பிரதமர் திரு. ஹரல்ட் வில்சன் காமன்ஸ் சபையில் பேசுகையில் பிரபுக்கள் சபையின் அதிகாரங்களைக் குறைக்கவும் அதன் பாரம்பரிய அடிப்படையை முற்றாக நீக்கவும் ஒரு புதிய விரிவான சட்டம் விரைவில் கொண்டுவரப்படுமென அறிவித்தார். பிரபுக்கள் சபையைப் புனரமைப்பது பற்றிய சர்வ கட்சி மாநாடு முடிவடைந்துள்ளதாக அறிவித்த அவர், பிரபுக்கள் சபையின் அமைப்பு மற்றும் அதிகாரங்கள் பற்றி இம்மகாநாட்டின் போது ஆக்க பூர்வமான யோசனைகள் பெறப்பட்டதாகத் தெரிவித்தார். காமன்ஸ் சபையில் நிறைவேற்றப் பட்ட ரொடீஷியா சம்பந்தமான ஐ. நா. தீர்மானத்தைப் பிரபுக்கள் சபை நிராகரித்ததைத் தொடர்ந்தே திரு. வில்சன் மேற்கண்ட அறிக்கையை விடுத்தார்.

## புதிய நாணயம்

1945 ஒக்ரோபர் 16 இல் உணவு விவசாய ஸ்தாபனம் நிறுவப் பட்டது. இவ்வாண்டு ஒக்ரோபர் 16 இல் உணவு அபிவிருத்தியைக் குறிக்கும் ஒரு புதிய நாணயம் பாவனைக்கு விடப்பட இருக்கிறது.

## தமிழார்வம் எங்கும் வேண்டும்

(இன்பாக)

சென்ற வாரத்திற்கு முந்திய வாரத்தில் உதயதாரகையில் வெளிவந்த 'பெற்றமா'வின் கடிதம் பார்த்தேன். தாய் மொழியாம் தமிழ்மொழியைப் போதனமொழியாகக் கொண்ட எமது பெரும் பாடசாலைகள் தமிழ்மொழியைப் புறக்கணித்துக் கல்லூரி விழாக்கள், வைபவங்களைத் தொடர்ந்தும் ஆங்கில மொழியில் நடத்தி வருவது கண்டிக்கப்படத் தக்கதே.

அதே நேரத்தில் "மதமுங் கலையும்" என்ற தலைப்பில் தமிழ்க்கிறிஸ்தவர்கள் தேவாலயங்களில் தமிழில் பண் இசைப்பதையும், பரதம் கற்பதையும் சந்தேக நோக்குடன் பார்க்கும் ஒரு கூட்டம் அதையிட்டு இந்து சமயத்தினரை எச்சரிப்பதையும் பார்த்தோம்.

எமது கிறிஸ்தவ பெரும் பாடசாலைகள் தமிழ் மொழியையும், தமிழ்க்கலைகள் கலாச்சாரத்தையும் புறக்கணித்து அந்நிய மொழியையும், அந்நிய கலாச்சாரத்தையும் போற்றுவனதயே தம் பாரம்பரியமாகப் பேணி வருவதால் நேர்ந்த விளைவே இவை!

எதிர்காலத்திலாவது எமது கிறிஸ்தவ பெரும் பாடசாலைகள், பாடசாலை விழாக்கள், வைபவங்களைத் தமிழ்மொழியில் நடத்தவும், தமிழ்க்கலைகளுக்கு உயர்ந்த இடத்தை அளிக்கவும் முன்வர வேண்டும். அதற்கு மேற்படி சந்தேக நோக்குடன் விடுக்கப்பட்ட எச்சரிக்கை உதவவேண்டும்.

கிறிஸ்தவ பெரும் பாடசாலைகளில் ஒரு காலத்தில் ஆங்கிலம் போதனா மொழியாக இருந்து வந்தது. அந்நாட்களில் தமிழ்ப் பாடசாலைகளில் இருந்து தம்மைத் தரம் பிரித்துக் காட்ட அவை பாடசாலை விழாக்கள், வைபவங்களை ஆங்கிலத்தில் நடத்தி வரட்டுக் கௌரவத்தைக் காப்பாற்றி இருக்கலாம். ஆனால், இன்றும் அதையே தமது பாடசாலைப் பாரம்பரியமாகத் தவறாக எடை போடுவது, அப்பாடசாலைகளுக்கு மட்டுமல்லாது தமிழ்க் கிறிஸ்தவர்களுக்கும் நல்லதல்ல.

அதிலும், தமிழ்க் கிறிஸ்தவ மக்களுக்குத் தமிழ் மொழியின் மீதும், தமிழ்க்கலைகள் மீதுமுள்ள உரிமையைப் பிறர் மறுக்கத் தணிவு கொள்ளும் அளவிற்கு எமது கிறிஸ்தவ பெரும் பாடசாலைகள் தொடர்ந்து விதேசியப் போக்கைக் கைக்கொள்வது கண்டனத்திற்குரியதே!

தமிழ் இல்லாமல் சைவம் இல்லை; சைவம் இல்லாத தமிழ் இல்லையென வாது செய்து கிறிஸ்தவ தமிழ் மக்களின் தமிழ் ஆர்வத்திற்கு அணை கால முற்படுபவர் தமிழர் யாவரும் சைவர் அல்ல என்பதையும், சைவர் யாவரும் தமிழர் அல்ல என்பதையும் உணரல் வேண்டும். கிறிஸ்த தமிழர் மட்டுமென்ன மாத்தமிழ் பேசும் இஸ்லாமிய தமிழ் மக்கள் கூட சைவர் அல்லவே! ஒரு காலத்தில் பௌத்தமதம் தமிழ் நாடு பூராவும் வியாபித்திருந்ததும் காம் அறியாததல்ல. பல்வேறு சமய இலக்கியங்களால் தமிழ் மொழி சிறப்புற்றிருப்பதைத் தமிழறிந்தவர் அறிவர். அதை அறியாதோர் அறியாதோரே. இனிப் பரத கண்டம் முழுவதும் பரந்து வாழும் இந்துக்கள் அனைவரும் தமிழரும் அல்ல; அவர்கள் கலாச்சாரமும் தமிழ்க் கலாச்சாரம் அல்லவே. ஆகவே தமிழ்மொழி மீது தமிழ்ச் சைவ மக்களுக்கு உள்ள அத்தனை உரிமையும் தமிழ்க் கிறிஸ்தவர்களுக்கும் உண்டு. வேண்டுமானால் தமிழ் மட்டும் அறிந்த கிறிஸ்தவர்களும், தமிழ் அன்றித் தமக்குக் கிறிஸ்தவமும் இல்லையென்று கூறலாம் அல்லவா. பிறமொழி அறியாத கிறிஸ்தவர்கள் தம் சமய இலக்கியங்களை வேறு எந்த மொழி வாயிலாகப் படித்து உணரக் கூடும்.

எமது கிறிஸ்தவ பெரும் பாடசாலைகள் இனியாவது பிறர் எம்மீது அபாண்டமாகக் குறை சுமத்த இடந்தராது தமது வைபவங்கள், விழாக்களைத் தமிழ்ப் பண்புக்கு மாறுபடாது, தமிழ் மொழிமூலம் நடத்த முன் வர வேண்டும். அதற்கு மேற்படி சந்தேகக் கண்டன உரைகள் உதவவேண்டும்.

மாறாக கிறிஸ்தவ பெரும் பாடசாலைகளின் தவறான போக்கைச் சைவப் பெரும் பாடசாலைகள் அப்படியே காப்பியடித்தாற் போல் பிரதிபண்ணித் தம் பாடசாலை வைபவங்களையும் ஆங்கிலத்தில் நடத்த முற்படுவது பரிகசிக்கத் தக்கது. கிறிஸ்தவர் பேரில் சந்தேகம் பார்க்கும் பெரியோர் முதலில் தமது கண்களில் காணும் துரும்பை எடுத்துப்போட வழி பார்ப்பது தமிழ்மொழியின் விருத்திக்கும், தமிழ்மொழியைப் பல துறைகளுக்கும் விரைந்து புகுத்தவும் உதவக்கூடும்.

## ஆர். ஜீ. யின் சிங்கள மக்கள் கட்சி

திரு. ஆர். ஜீ. சேனநாயக்காவால் உருவாக்கப்படும் சிங்கள மகாசன பக்சயவின் கொள்கைகள் பின்வருமாறு:

சர்வாதிகாரத்தை முறியடித்துச் சனநாயக சோஷலிச அரசாங்கமொன்றை அமைப்பதே கட்சியின் கொள்கையாக விருக்கும்.

ஒற்றையாட்சி முறையைப் பாதுகாக்கவும், இலங்கையென்ற சொல்லுக்குப் பதிலாகச் சுதேசப் பேரான சிங்களே என்ற பெயரைச் சூடவும், பல்வேறு சாதியத் தவரையும சிங்களப் பாஷையின் கீழ் ஒன்றுபடுத்துவதும், அந்நிய ஆதிக்கத்திலிருந்தும் பொருளாதாரத் துறையிலிருந்தும், நாட்டை விடுவித்துச் சுயதேவையைப் பூர்த்தி செய்வதும் இக் கட்சியின் பிரதானநோக்கங்களாக இருக்கும்.

கள்ளக் குடியேற்றத்தைத் தடுப்பது, பதிவுப் பிரசைகளுக்கெனப் புதிய தேர்தல் இடாப்பை ஏற்படுத்தி அதன் மூலம் மலையகத்தில் உள்ள கிராமப்புற மக்களின் உரிமைகளுக்கும், சலுகைகளுக்கும் பாதுகாப்பளிப்பது.

இலங்கையருக்கே வேலைவாய்ப்பளிப்பது. இலங்கையரல்லாதோருக்கு இலவச அரிசி, இலவசக்கல்வி, வைத்திய வசதிகளை இல்லாமல் செய்வது.

தி. மு. க., "நாம் தமிழர்" இயக்கம்போன்ற வெளிநாட்டு அரசியல் சக்திகளின் கிளைகள் இலங்கையில் நிறுவப்படுவதை தடைசெய்வது, அது பற்றிய படங்களை, சஞ்சிகைகளைத் தடுப்பது.

சகல மத வழிபாட்டுக்கும் உத்தரவாத மளிப்பது. விகிதாசாரப்படி சகல சாதியத்தாருக்கும் அரசாங்க, கூட்டுத்தாபன நிறுவனங்களில் வேலை கொடுப்பது.

பத்திரிகைச் சுதந்தரத்துக்கு உறுதியளிப்பது.

சிங்கள ஆசிரியர்களின் நிலையை உயர்த்துவது.

மாவட்ட சபை நிறுவப்படுவதைத் தடுப்பது; நாட்டில புதிய அரசுகளை நிறுவும் இயக்கங்களைத் தடுப்பது ஆகியனவும் இந்தக் கட்சியின் நோக்கங்களாக இருக்கும்.

## 10 மணி நேர வேலை விதி நீக்கப்பட வேண்டும்

மகா வித்தியாலயங்களிலும், மத்திய மகா வித்தியாலயங்களிலும் கடமையாற்றும் இன்டர் மீடியட் தராதரப் பத்திரத் தகைமையுடைய ஆசிரியர்கள் தமக்குரிய வேதனத்தைப் பெற்றுக்கொள்ள ஐந்தாம் வகுப்புக்கு மேற்பட்ட வகுப்புகளில் வாரம் பத்து மணித்தியாலத்திற்குக் கடமையாற்ற வேண்டும் என்ற விதியை நீக்கக் கல்வியமைச்சு முடிவு செய்துள்ளது. இந்த முடிவு இன்டர் மீடியட் தராதரப் பத்திரத் தகைமைக்குச் சமனான வேறு தகைமை உடையவர்களுக்கும் செல்லுபடியாகும்.

இத்தகைய தராதரப் பத்திரங்களை உடைய ஆசிரியர்களின் சேவை நல்ல விதமாகப் பயன்படுத்தப் படுகின்றதா என்பதையும் கல்வி அமைச்சு ஆராய்ந்து வருகிறது.

பின்வரும் தகைமைகளில் ஒன்றை உடையோர் அத்தகைய சம்பளத்தைப் பெற முடியும்.

லண்டன் அறிவாண்ஸ்லெவல் பரீட்சையில் மூன்று பாடங்கள் சித்தியடைந்தவர்.

கல்விப் பொதுத் தராதரப் பத்திர உயர்தரப் பரீட்சையில் மூன்றுபாடம் சித்தியடைந்தோர்.

அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழக மொன்றில் பொதுக் கலைத் தேர்வு பரீட்சையில் தகைமை பெற்றோர் இலங்கை தொழில் நுட்பக் கல்லூரியில் வர்த்தக டிப்ளோமா வகுப்பில் இரண்டாவது பரீட்சை சித்தியடைந்தோர்.

## சோமசுந்தரப் புலவர் நினைவு தினம்

"மொழியை வளர்ப்பவர்கள் புலவர்களே. அவர்கள் இல்லையெனில் மொழியில்லை; நல்ல கதை இல்லை. இலக்கண வரம்பு தப்பாது எல்லாப் புலவர்களாலும் கவிதை பாட இயலுவதில்லை. கவிஞன் சில சமயங்களில் அவ்வரம்பை மீறவதுமுண்டு. அவை பழையன கழிதலும், புதியன புகுதலும் என்பதற்கமைய இலக்கணமாகி விடுகிறது".

என பலாலி ஆசிரியர் பயிற்சிக் கலாசாலைத் தமிழ் விரிவுரையாளர் திரு. க. சச்சிதானந்தம், யாழ். இலக்கிய வட்டத்தின் ஆதரவில் நடைபெற்ற சோமசுந்தரப் புலவர் நினைவுதினக் கூட்டத்தில் பேசுகையில் குறிப்பிட்டார்.

யாழ் மாநகர மூன்றலில் நடைபெற்ற கூட்டத்திற்கு யாழ். இலக்கியவட்ட உப தலைவி திருமதி வள்ளிநாயகி இராமலிங்கம் (குறமகள்) தலைமை வகித்தார்.

திரு. சச்சிதானந்தம் தொடர்ந்து பேசுகையில், "சோமசுந்தரப் புலவர் அவர்களும் மக்கள் சாதாரணமாகப் பேசும் வினை முடிபுகளையும், சொற்களையும் வைத்துப் பாடல்களை யாத்துள்ளார். இது ஈழத்தில் எந்தப் புலவரும் செய்யாத ஒரு காரியமாகும். ஒதே, பாபுதே, போமா என்னும் புலவர் அவர்களது சொற்பிரயோகங்கள் அவர்களது புரட்சிகரமான நடைக்கு எடுத்துக் காட்டாகும். புதியகோணத்தில் நின்று சிறந்த உத்திமுறைகளைக் கையாண்டு கவிதை இயற்றிய சிறப்பு புலவர் அவர்களுக்கு உண்டு. ஈழத்துக் கதையுலகைப் பொறுத்தவரையில் சோமசுந்தரப்புலவர் அவர்கள் ஒரு திருப்புமுனையாகத் திகழ்கின்றார் என்பதில் ஐயமில்லை" எனக் குறிப்பிட்டார்.

திருமதி வள்ளிநாயகி இராமலிங்கம் தமது தலைமையுரையில், சோமசுந்தரப் புலவர் ஈழத்துக் கவிதை வானிலே சுடர்விடுபவராக விளங்கினார் எனவும், அவரது புகழை நிலைநாட்ட அன்னாருக்கு நினைவுச்சின்னங்கள் நாட்டின் பல பாகங்களிலும் அமைக்கப்பட வேண்டுமெனவும், அவரது நூல்கள் மலிவுப் பதிப்புக்களாக வெளியிட இங்குள்ள பதிப்பகங்கள் முன்வரவேண்டும் எனவும் குறிப்பிட்டார்.

அடுத்துப் பண்டிதை தங்கம்மா அப்பாக்குட்டி பேசும்போது, "கவிஞர்கள் பிறக்கின்றார்களே ஒழிய இறப்பதில்லை. உலகிலே நிலைத்து நிற்கக்கூடிய ஓரேயொரு பாடலைப் பாடினாலே ஒரு கவிஞன் சிரஞ்சீவியாகிவிடுவான் என்றும் நிலைத்துநிற்கக்கூடிய அருமை மிகு கவிதைகள் பலவற்றை யாத்து ஒப்பற்ற புலவராக மிளிர்பவர்தான் சோமசுந்தரப் புலவர்; அவருடைய கவிதைகளில் பழமையும் புதுமையும் இழையோடக் காணலாம்; இனிய, எளிய சொற்களைக் கொண்டே அழகாகக் கவிதையாக்கும் ஆற்றல் அவருக்கு இருந்தது" என்றார்.

இரசிகமணி கனக செந்திநாதன் பேசுகையில், "இந்தியாவில் பாரதி எவ்வாறு கவிதையில் புரட்சி செய்தாரோ, அதேபோல் ஈழத்திலும் கவிதையில் புரட்சி செய்தவர் சோமசுந்தரப் புலவர் ஆவார். ஈழத்துக் கவிதை உலகம் சோமசுந்தரப் புலவர் காலத்திலிருந்து ஒரு புதிய திசையை நோக்கிச் செல்லலாயிற்று. சாதாரணமான சொற்களைக் கொண்டே இனிய கவிதைகளைப் பாடிய பெருமை இவருக்குண்டு. பச்சைப் படியே யாழ்ப்பாணத்துச் சொற்களைப் பெய்து அருமையான கவிதைகளை இவர் யாத்துள்ளார். புலவர் அவர்களுடைய குழந்தைப் பாடல்கள் ஒப்புயர்வற்றன. கத்தரி வெருளியையும், ஆடிப்பிறப்புக் கூழையும் அறியாதார் இன்று யாரும் இல்லை. தமிழகத்திலிருந்து வந்த எந்தக்குழந்தைப் பாடல்களும் இவரின் பாடல்களுக்கு இணையாகா. இலங்கை வளத்தைப்பற்றி இவர் எழுதிய பாடல்கள் இவரது கற்பனை வளத்திற்கு ஒரு மணிமுடியாகத் திகழ்கின்றது. அங்கதச் சுவை ததும்பச் சமூகத்திலுள்ள சீர்கேடுகளை ஆணித்தரமாகச் சுட்டிப் பாடிக் காட்டிய சிறப்பும் இவருக்குண்டு. பாரதிக்குப் பின்பு தோன்றிய எந்தத் தமிழ்ப்புலவரும் சோமசுந்தரப் புலவருக்கு இணையாகார் என அறுதியிட்டுக் கூறலாம்" என்றார்.

யாழ் இலக்கியவட்ட இணைச் செயலாளர் யாழ்வாணன் நன்றி கூறினார்.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

உதயதாரகை
UTHAYATHARAKAI

1968 ஆம் ஆண்டு யூலை மீ 12 ஆம் நாள்

# அடுத்து என்ன ?

ஸ்ரீலங்கா சுதந்தரக் கட்சியி லிருந்து வெளியேற்றப்பட்ட திரு. ஆர். ஜி. சேனநாயக்கா தனிச் சிங்கள - புத்த கட்சியொன்று ஆரம்பிக்கவிருப்பதாகச் செய்தி உண்டு. "சிங்கள மகாசனபாக்சய" என்பது அவர் ஆரம்பிக்கவிருக்கும் கட்சி. அதன் இலட்சியங்களின் பட்டியலைக் கவனிக்கும் போது இலங்கையைத் தனிச் சிங்கள - புத்த நாடாக்குவதே அதன் நோக்கமாகக் காணப்படுகிறது. நாட்டின் பெயரையே மாற்றிச் சிங்கள நாமம்சூட்டுவதே முதல் நோக்கமாகும். சிங்களமே நாட்டு மொழியாகி, புத்தமே அரச மதமாகி, தமிழருக்கென இந்நாட்டில் எந்த இடமுமே இல்லாதாக்கி, குடிசன எண்ணிக்கை விகிதப்படியே அரசாங்கத்திலோ கூட்டுத் தாபனங்களிலோ உத்தியோகம் வழங்கி, பிரசாவுரிமையற்றோர் திருப்பி அனுப்பப் பட்டு. இவ்விதமாய் முழுக்க முழுக்கச் சிங்கள நலம் பேணும் தடித்த வகுப்புவாதக் கொள்கைகள் நிறைந்த ஒருகட்சியாக அது அமைய இருப்பதாகச் சொல்லப்படுகிறது.

இலங்கை சுதந்தரமடைந்த பின் வகுப்புவாதம் இலகுவில் அரசியல் இலாபம் தந்து வந்தது கண்கூடு. அது வளர்க்கப்பட்டு—பயிற்றப்பட்டுத் தேர்ந்த நிலையடைந்துள்ள இந்நாட்டிலே அவ்வித கட்சிக்கு ஆதரவு பெருகுமென்பதில் ஐயப்பட வேண்டியதில்லை. அதனால் ஏற்படும் அழிவு குறித்து அஞ்சவேண்டிய நிலைதான் உண்டு. அரசியல் இலாபம் இலகுவில் பெற விரும்பும் எவரும் எக்கட்சியிலிருந்தாலும் அதை விடுத்து இதில் சேரத் துடியாதிரார். பாமர மக்களுக்கு இக்கட்சியின் இலட்சியங்களைத் தேனுகச் சுவைக்கச் செய்து அவர்களைத் தம் பக்கமாய்ச் சேர்த்துக்கொள்ள இலகுவில் முடியும். அச்சுவையில் பழகியவர்கள்தானே அவர்கள். இனத்துக்கு விரோதமாய் இனத்தைத் தூண்டிவிட்டுத் தம் பாடு பார்ப்பது அரசியல் விளையாட்டாய் வந்த காலம் நமக்குப் பின் உண்டு. விளையாட்டு வெற்றியுங் கண்டது. (நாடு குட்டிச் சுவரானது வேறு கதை.) ஆகவே இக்கட்சி ஆதரவுபெற்று அதிகாரத்துக்கு வந்தால் ஆச்சரியப்படுவதற்கில்லை.

அது அதிகாரத்துக்கு வந்தால் நாடு எப்படியாகுமென நல்மனம் படைத்தவர்கள் சிந்திக்கலாம். அது வளராது தடுக்கலாம். ஆனால் அது சுலபமானதல்ல வென்பது நாம் கண்ட அனுபவம்.

இந்த நிலையில் தமிழ்த் தலைவர்கள் செய்யவிருப்பதென்ன ? தமிழ் மகாசன இயக்கம் ஒன்று ஆரம்பிப்பார்களா ? ஆதரவு கிடைக்குமா ? அது சாத்தியப்படுமென நம்பலாமா ? அப்படி ஒன்று தேவையா ? அல்லது தமிழரும் சிங்கள நாட்டிலே சிங்களவராய் மாறிவிட்டால் சோலியில்லையா ? அப்படி வாழவும் பாழும் தமிழ்மனம் இடந்தராதே: தலைநிமிர்ந்து நிற்க நடத்தப்பட்டாயிற்றே. உள்ளார விருப்பமில்லா விட்டாலும் வெளியே வீரம்பேசிப் பழகியாயிற்றே. தான் வாழ—தன் குடி வாழ வாய்ப்புக்கிடைத்தால் தலையைத் தரைமட்டுந் தாழ்த்தி மாற்றானை வணங்கவும் பின்நிற்காத இயல்பு இருக்கும்வரை தமிழருக்கெனத் தனி இயக்கம் உருப்படுமா ? உருப்படாவிட்டால் நிலையென்ன ?

சாதிப் பாகுபாட்டில், பழைய பாரம்பரியங்களில், அரசியல்வாதங்களில் இன்று தம்முள் பிரிந்து மோதும் தமிழ்த்தலைவர்கள் ஒன்று சேராவிட்டால், தம் செல்வாக்கும் கெட்டித்தனமும் காட்டும் ஆர்வத்தில் மக்களையே பிரித்து வைக்கும் நிலை மாறுவிட்டால், தமிழருக்கு இந்த நாட்டில் விடுதலை கிடைக்குமெனச் சொல்ல முடியாது.

சிங்களக் கட்சிக்கு நிகரான ஒரு தமிழ் முன்னேற்றக் கட்சி தோன்றும் அவசியம் ஏற்பட்டுள்ளது. அது பாராளுமன்ற அங்கத்துவத்தையோ அதிகாரத்தையோ செல்வாக்கையோ இலட்சியமாகக் கொள்ளாத ஒரு விடுதலை இயக்கமாக வேண்டும். போட்டி அரசியற் கட்சியாகவல்ல, ஒரு சாராரின் விடுதலை இயக்கமுமாயல்ல, தமிழ்பேசும் இனத்தின் விடுதலை இயக்கமாக இயங்கும் ஒரு கட்சி இன்று வேண்டும். நாடும், மொழியும், கலையும் உரிமையுங் காக்கும் இயக்கமாய் அது இயங்க வேண்டும்.

அந்த இயக்கத்தில் இன்றுள்ள தமிழ் அரசியல் வாதிகள், அவர்கள் எக்கட்சியினராயினும்சேர்ந்து பணியாற்ற - சுயநலமற்ற பணியாற்ற - முன்வரவேண்டும். ஈழத் தமிழர் விடுதலை இயக்கமும், தமிழருக்கு இந்நாட்டிலே சுதந்தரம் பெறமுனையும் தமிழரசுக் கட்சியும், தமிழரின் சமஉரிமை விரும்பும் தமிழ்க்காங்கிரசும் பிறவும் ஒன்று சேர்ந்து இன்றைய நிலையில், தேவையில் வேண்டிய இலட்சியங்களை முன் வைத்துப் பொதுநல நோக்கோடு பணிபுரியும் இயக்கமொன்று ஆரம்பிப்பதே இன்றைய தேவை.

